**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC No. 272/2020** **Date : 28/10/2021**

**PW2 (ஆசைதம்பி) குறுக்கு விசாரணை** : மனு எண். 3215/2021 அனுமதிக்கப்பட்டு, சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

நான் 12 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் திருமணமாகி எனது தகப்பனாருடன் வசித்து வருகிறேன். எனது தகப்பனார் பணி ஓய்வு பெற்று 23 ஆண்டுகள் இருக்கும். எந்த தேதி என எனக்கு நினைவில்லை. மீண்டும் சாட்சி 1997 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றதாக கூறுகிறார். எதிரிக்கும் எனது தகப்பனாருக்கும் சுமார் 15 ஆண்டுகள் வரவு செலவு உள்ளது. அதாவது பணி ஓய்வு பெற்ற பின்புதான் உள்ளது. எனது தகப்பனார் கடன் வாங்கும் போது என்னிடமும், எனது தாயாரிடமும் கூறுவார். ஓய்வூதியமாக எனது தகப்பனார் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வாங்குவார். 2015 ஆம் ஆண்டு என் தகப்பனார் எந்த பணமும் எதிரியிடமிருந்து வாங்கவில்லை. அதன் பின்பும் எனது தகப்பனார், எதிரியிடமிருந்த வாங்கவில்லை. காவல் துறையில் என்னை விசாரித்த போது என் தகப்பனார் உடன் இல்லை. யார் என்னை விசாரித்தார்கள் என்றால் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அவர் பெயர் தெரியாது. 02/11/2017 அன்று இரவு என்னை விசாரித்தனர். அப்போது எதிரி காவல் நிலையத்தில் உள்ளே இருந்தார்.

CWS

எங்களுடைய ஊருக்கும் பெரம்பலூருக்கும் சுமார் 17 கி.மீ தொலைவு உள்ளது. லாக்-ஆப்பில் எதிரியை வைக்கவில்லை. வெளியே தான் உட்கார்ந்திருந்தார். எதிரியை காவல் துறையினர் விசாரிக்கும் போது என் தகப்பனாரும் இருந்தார். நான் 10 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து சென்றுவிட்டேன். எனது தகப்பனாரை 11 மணிக்கு அனுப்பிவிட்டனர். மறுநாள் காலை 11.00 மணியளவில் தான் எதிரியை காவல்துறையினர் கைது செய்தனர். முதல் நாள் இரவு முழுவதும் எதிரி காவல் நிலையத்தில் இருந்தார். எதிரியிடமிருந்து 10 ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக காவல் துறையினர் கூறியுள்ளனர் என்றாலும், அதில் அப்போது நான் உடன் இல்லை என்றாலும் சரிதான். எனது தகப்பனாருக்கு தான் அந்த விபரம் தெரியும். ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதற்கு எனது தகப்பனார் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்திட்டுள்ளார். நான் ரூ.20,000/- எதிரியுடன் கடன் வாங்கியுள்ளேன். அதையும் எதிரி அந்த 6 லட்சத்தில் சேர்த்துக் கொண்டார். அப்போது எதிரி என்னிடம் ஆவணங்கள் எதுவும் வாங்கி கொள்ளவில்லை. மாறாக ஒரு நோட்டு புத்தகத்தில் கையொப்பம் பெற்றார். எங்கள் ஊரில் கூட்டுறவு வங்கி உள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஏதும் இல்லை. அந்த வங்கியில் இதுவரை நான் கடன் ஏதும் பெறவில்லை. எனது அப்பா, எதிரியிடம் கடன் வாங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியும். எதிரி ஸ்டாம்பு ஒட்டிய பாண்டு பேப்பரிலும், வெள்ளை மற்றும் பச்சை தாள்களிலும் கையொப்பம் மட்டும் பெறுவார். அவர் நோட்டு புத்தகத்தில் கையொப்பம் பெறுவார். 5% வட்டியை ஒத்துக் கொண்டு தான் நாங்கள் கடன்

வாங்கினோம் என்றால் சரிதான். வங்கியில் கடன் வாங்கினால்1% வட்டி செலுத்த வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். வங்கியில் இந்த தொகைக்கு கடன் கிடைக்கும் போது ஏன் நாங்கள் எதிரியிடம் கடன் பெற்றோம் என்றால் ஒரு அண்ணன் எங்களுக்கு எதிரியை அறிமுகப்படுத்தி 5% வீத வட்டிக்கு கடன் கொடுப்பார் என கூறியதால், நாங்கள் எதிரியிடமே வரவு செலவு வைத்தோம். எதிரியை கைது செய்து நிலத்திற்கு சென்ற போது நான் செல்லவில்லை. எனது தகப்பனார் சென்றாதா என எனக்கு தெரியவில்லை. 2015 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் தேதி என் தந்தையார் ஏற்படுத்தப்பட்ட கிரய பத்திரத்தில் நானும், எனது தாயாரும் கையொப்பமிட்டுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் கிரயம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அதில் கையொப்பமிட்டு கொடுக்கவில்லை. அந்த கிரயம் செல்லாது என நாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்திலோ, நீதிமன்றத்திலோ வழக்கு தொடுக்கவில்லை என்றால் சரிதான். பட்டா மாற்றிய போது நாங்கள் தாசில்தாரிடம் ஆட்சேபணை கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஏனென்றால் அவர் மாற்றிய விபரம் எனக்கு தெரியாது. எந்த தேதியில் எதிரி என்னை மிரட்டினார் என காவல் துறையினர் விசாரணையின் போது நான் கூறவில்லை. நாங்கள் வழக்கு தொடுப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்பு தான் எங்களிடம் கூடுதல் வட்டி பெறுவது தெரியவந்தது. எதிரி சட்டத்திற்கு உட்பட்டு உரிமம் பெற்று நிதி தொழிலை செய்து வருகிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எதிரியின் அலுவலகத்தில் சி.சி.டி உள்ளது என்றால் நான் சென்ற போது இல்லை. நான்

CNR

முதல் விசாரணையில் கூறிய விபரங்களை தான் போலீசார் என்னை விசாரித்த போது கூறினேன் என்றால் சரிதான். எதிரி கூடுதல் வட்டி வாங்கினார் என காண்பிக்க ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. 20 பாண்டுகளில் எதிரி கையொப்பம் பெற்றார் என நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. ரூ.15 லட்சம் செலுத்தியதாக நான் கூறுவதற்கு என்னிடம் எந்த ஆவணமும் இல்லை ஆனால் என் தகப்பனாரிடம் உள்ளது. எனது பெரியம்மா எதிரியிடம் வாங்கிய பணம் குறித்து நான் போலீசாரிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனார் கொடுத்த புகார் தட்டச்சு செய்யப்பட்டதா, கையால் எழுதப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு எதிரி கந்து வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும், எனது தகப்பனாரை எதிரி ஒருபோதும் மிரட்டவில்லை என்றாலும், சட்டப்படியாக தான் கிரய பத்திரம் ஏற்படுத்தி கொடுத்தார் என்றாலும், யாரோ ஒருவர் தூண்டுதலின் பேரில் நாங்கள் எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. எதிரி வசதியாக உள்ளவர் என்றாலும் அவரை மிரட்டினால் எதிரி பணம் செலுத்திவிடுவார் என்றும் இந்த வழக்கை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

Taken down by / before me in
open court read over/interpreted to
the witness in the presence of the
accused/accused/s pleader and
admitted by the witness to be
correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.